மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

**இ.ம.எண்.337/2024 in இ.ம.எண்.410/2014 in அ.வ.எண். 287/2012**

பெயர் : தனசேகர்

சாட்சி – நீ.ம.சா–2 நாள்: 28.03.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு)**

1. பூமியை அளவீடு செய்வதற்கு முன்பு நான்கு புறமும் எல்லை கற்களை நிர்ணயம் செய்து அதன் பின்னர் தான் அளந்தேன் என்றால் சரிதான். நான் அளவீடு செய்யும் போது எந்த தரப்பினர்களாவது ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால் இல்லை. நான் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யப்பட்டதன் படி புல வரைபடங்களை கொண்டு வந்துள்ளேன். அதன் புல வரைபடத்தின் க.ச.550 மற்றும் க.ச.551 காலைகளுக்கு உண்டான புல வரைபடத்தின் பதிவேட்டுடன் மேற்படி காலைகளுக்கு உண்டான உண்மை நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**க.ச.550 காலைக்கு உண்டான புல வரைபடத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆகவும், க.ச.551 காலைக்கு உண்டான புல வரைபடத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது**).

2. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பல்லடம் தாலூக்காவில் உட்பிரிவு நடவடிக்கைகள் 1979 ஆண்டு தொடங்கி 1985 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. நான் அதற்கு உண்டான அ–பதிவேட்டினை சம்மந்தப்பட்ட பக்கம் மற்றும் அந்த பதிவேடு முடிவடையும் பக்கம் ஆகியவற்றின் உண்மை நகலுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**க.ச.550 மற்றும் க.ச.551 காலைகளுக்கு உண்டான அ–பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கம் மற்றும் அந்த பதிவேடு முடிவடையும் பக்கம் ஆகியவற்றின் உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது**).

3. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்று அதில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மாறுதல் செய்ய உத்தரவு பிறப்பித்து அதன் படி புல வரைபடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் தாக்கல்

செய்துள்ள பதிவேட்டில் அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டதற்கான குறிப்போ மாற்றமோ காணப்பட வில்லை. நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 வரைபடங்களின் படிதான் நீதிமன்ற ஆணையருடன் சென்று அளந்தேன் என்றால் சரிதான்.

**புதிதாக சாட்சி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பொறுத்து குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை (மனுதாரர்கள் தரப்பு)**

க.ச.550 காலை 550/1 எ, 550/1 பி, 550/1 சி, 550/3 எ, 550/3 பி மற்றும் 550/3 சி என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1985 ஆம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செய்யப்பட்டது. க.ச.551 காலை 551/1, 551/2, 551/3 என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அதுவும் 1985 ஆம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தான் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.28 18:11:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.